ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆசிரியர்கள்

திரு. செ. முத்துசாமி (திரு. கே. எஸ். கணபதி சார்பில்): மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில், ஹையர் கிரேடு பதவிகளில் பணியாற்றும் செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கு செகண்டரி கிரேடு ஊதியம் கொடுக்காமல் அவர்களது மூப்பு நிலையைப் புறக்கணித்து, ஹையர் கிரேடு பயிற்சி பெற்ற பின்னர் செகண்டரி கிரேடு தேர்வு எழுதி வெற்றி பெறுவோர்க்கு செகண்டரி கிரேடு ஊதியம் வழங்கப்படுவதில் முன்னுரிமை அளிக்கப்படுவது உண்மையா?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) & (இ) இடைநிலைத் தகுதி பெற்றிருந்தும், இளநிலை ஆசிரியர்களாகப் பணியாற்றி இளநிலை ஆசிரியர்களுக்கான சம்பள விகிதத்தையே பெற்று வருபவர்கள் இடைநிலை ஆசிரியர்களுக்கான சம்பளத்தை பெற்று பயனடையவேண்டும் என்ற நோக்கத்தில் அரசினர் அதிகமான இளநிலை ஆசிரியர் பதவிகளை இடைநிலை ஆசிரியர் பதவிகளாக 1967-68-ம் ஆண்டு முதல் படிப்படியாக மாற்றிக்கொண்டு வருவதோடு, 23—2—1972 நாளுக்குப் பின் எந்த ஒரு இளநிலை ஆசிரியர் பதவியிலும் ஒரு இடைநிலை தகுதிபெற்ற ஆசிரியரை அமர்த்தக்கூடாது என்று உத்திரவிட்டுள்ளனர். 23—2—1972-க்குள் இடைநிலை ஆசிரியரின் தகுதி பெற்றிருந்தும் அத்தேதியில் இளநிலை ஆசிரியர் சம்பளம் பெறும் ஆசிரியர்களை அவர்களுக்கிடையே உள்ள மூதுநிலையைத்தான் கணக்கில் கொண்டு இடைநிலை ஆசிரியர் பதவிகளில் அமர்த்தவேண்டுமென்றும் அவர்கள் எந்த தேதியில் இடைநிலைத் தகுதி பெற்றனர் என்பதைக் கணக்கில் கொள்ளவேண்டியதில்லை என்றும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதையே ஊராட்சி ஒன்றியங்களில் பின்பற்றுகின்றனர்.

Making the Coimbatore Municipality a Corporation

* 103. *Q.*—Thiru G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether there is any proposal to make the Coimbatore Municipality a Corporation; and

(*b*) if so, the stage at which the matter now stands?

1973 நவம்பர் 24]

கோயம்புத்தூர் நகராட்சியை மாநகராட்சியாக மாற்றுதல்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கோயம்புத்தூர் நகராட்சியை மாநகராட்சியாக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆமெனில், இது தற்பொழுது எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) ஆம்.

(இ) இக்கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, கோவை நகராட்சியை மாநகராட்சி ஆக்கலாமா என்பதுபற்றி ஏதாவது சர்வே எடுக்கப்பட்டு அது பற்றிய அறிக்கை அரசுக்கு வந்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, கோவை நகராட்சியிலிருந்து அதை மாநகராட்சி ஆக்க வேண்டுமென்று தீர்மானம் போடப்பட்டு வந்திருக்கிறது. சிங்கநல்லூரைச் சேர்த்து மாநகராட்சி ஆக்க வேண்டுமென்றும் அங்கேயிருந்து அரசுக்குச்சில தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டு அனுப்பப்பட்டிருக்கின்றன. அவைகள் பரிசீலனை செய்யப்பட்டு அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : தலைவரவர்களே, வேறு ஏதாவது நகரத்தை மாநகராட்சியாகக் கூடிய யோசனை இருக்கிறதா அப்படிப்பட்ட தீர்மானத்தை எந்த நகராட்சி முன்மொழிந்து அனுப்பியிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, திருச்சியை மாநகராட்சியாக்க வேண்டுமென்று எங்களுக்குத் தீர்மானம் வந்திருக்கிறது. இதைப் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறோம். ஒரு நகராட்சியை மாநக ராட்சியாக மாற்ற வேண்டுமானுல், 5 லட்சத்திற்கு மேற்பட்ட ஜனத் தொகையும் இரண்டு கோடி ரூபாய்க்கு மேல் வருமானமும் வரவேண்டு மென்ற ஒரு விதி இருக்கிறது. அதற்கு உட்பட்டு இப்போது திருச்சி நகரசபையையும், திருவரங்கம் நகரசபையையும் இணைப்பது மாத்திரமல்லாது திருவரம்பூர் பகுதியை இணைக்கலாமா, பொன்மலை நகராட்சியை மாநகராட்சி யோடு இணைக்கலாமா என்று பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம்.

திரு. ஜி. பராங்குசம் : தலைவரவர்களே, முதலில் திருச்சி மாநகராட்சி ஆகுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, நிச்சயமாக ஆகும் என்பதை அறியலாம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: கேள்வி கோவையைப் பற்றியது தான்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, கோவை, திருச்சி இவைகளை மாநகராட்சிகளாக ஆக்குவதாக இருந்தால், திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர் அதனுடைய அமைச்சராக இருக்கிற காரணத்தினால் திருச்சி முதலில் ஆகிவிடாது. முதலில் கோவை, அடுத்து தான் திருச்சி.

Loans to the Agriculturists

* 104. *Q.*—THIRU L. BALARAMAN (on behalf of THIRU K RAJARAM): Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) the particulars of the amount of loans sanctioned to the agriculturists through (i) the District Central Co-operative Banks and (ii) State Land Development Bank from 1st April 1967 to 31st March 1972 yearwar; and

(*b*) the amounts outstanding as on 1st April 1972?

உழவர்களுக்குக் கடன்

திரு. எல். பலராமன் (திரு. கே. ராஜாராம் சார்பில்): மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1—4—1967ஆம் நாளிலிருந்து 31—3—1972 ஆம் நாள் வரை (i) மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள், (ii) நிலவள வங்கிகள் ஆகியவற்றின் மூலம், உழவர்களுக்கு வழங்கப்பட்ட கடன் தொகைகளின், ஆண்டு வாரியான விவரங்கள் யாவை?

(இ) 1—4—1972 ஆம் நாள் நிலவரப்படி நிலுவையாகவுள்ள தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: மேலவை முன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது.

@ 420-423 ஆம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.